அக்டோபர்
.... 2019

விண்மீன்.காம்

# இரண்டாவது வார நடப்பு நிகழ்வுகள்

08 அக்டோபர் – 14 அக்டோபர்

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.**சுரேந்தர் சிங், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?



A) மல்யுத்தம்

B) குத்துச்சண்டை

**C) வலு தூக்குதல் ☑**

D) பளு தூக்குதல்

✓ ஜெர்மனியின் பெர்லினில் நடந்துவரும் 2019 உலக வலுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் சுரேந்தர் சிங், 110 கிலோ பிரிவில் தங்கம் வென்றது, கிளாசிக் ரா மற்றும் கிளாசிக் ரா மற்றும் சிங்கிள் பிளை ஆகியவற்றில் சிறந்த லிப்டர் விருதை வென்றது ஆகியவற்றின் மூலம் 3 உலக சாதனைகளை படைத்துள்ளார். மூன்று முறை உலக சாம்பியனான முகேஷ் சிங், மற்றுமொரு தங்கத்தை வென்றதன் மூலம் நான்கு முறை உலக சாம்பியன் வென்றவராக மாறியுள்ளார்.

**2.**உலக வர்த்தக அமைப்பானது முதலாவது உலக பருத்தி நாளை, எந்த நகரத்தில் நடத்துகிறது?




**A) ஜெனிவா ☑**

B) புது தில்லி

C) பாரிஸ்

D) நியூயார்க்

✓ உலக பருத்தி நாள் விழாவானது அக்டோபர் 7–11 வரை ஜெனிவாவில் நடைபெறுகிறது. இதில், உலக நாடுகளின் தலைவர்கள், வர்த்தக அமைப்பு பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். மத்திய ஜவுளி அமைச்சர் ஸ்மிருதி இராணி இந்தியா சார்பில் இவ்விழாவில் கலந்துகொள்கிறார்.

✓ பருத்தி உற்பத்தி மேம்பாடு, வர்த்தக வாய்ப்புகள், தொழில்நுட்ப வசதிகள், முதலீட்டாளர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இடையேயான வர்த்தக ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது. இந்திய பருத்தி கழகம் சார்பில், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் தரமான நீண்ட இழை பருத்தியான, 'சுவின்' உட்பட பருத்தியின் வெவ்வேறு இரகங்கள் குறித்த கண்காட்சியும் இந்த விழாவில் இடம்பெறுகிறது.

**3.**நடப்பாண்டின் ஜப்பான் ஓப்பன் டென்னிஸ் பட்டத்தை வென்றவர் யார்?



A) ஆண்டி முர்ரே

B) ரஃபேல் நடால்

**C) நோவக் ஜோகோவிச் ☑**

D) ரோஜர் பெடரர்

✓ ஜப்பானின் டோக்கியோவில் நடந்த ஜப்பான் ஓப்பன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், உலகின் No.1 வீரராக இருக்கும் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 80ஆவது இடத்தில் இருக்கும் ஆஸ்திரேலியாவின் ஜான் மில்மேனை 6–3, 6–2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கோப்பையை வென்றார். இது, ATP ஒற்றையர் பிரிவில் இவரது 76ஆவது பட்டமாகும். தவிர இவர், முதன்முறையாக இந்தத்தொடரில் பங்கேற்று கோப்பை வென்றுள்ளார். இதன்மூலம் இவர், பத்தாவது முறையாக பிரதான சுற்றில் அறிமுகமான ஒரு தொடரில் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

**4.**எந்த இந்திய மாநிலத்தைச் சார்ந்த ஜோதையா பாய் பைகாவின் ஓவியங்கள், இத்தாலியில் நடைபெறும் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்படுகின்றன?

A) குஜராத்

B) இராஜஸ்தான்

**C) மத்திய பிரதேசம் ☑**

D) சத்தீஸ்கர்



✓ இத்தாலியில், நவநாகரிகம் மற்றும் ஆடை வடிவமைப்பின் தலைநகரான மிலனில் நடைபெற்றுவரும் கண்காட்சியில் 80 வயதான பழங்குடிப்பெண் 'ஜோதையா பாய் பைகா' தீட்டிய ஓவியங்கள் மற்றும் கலை படைப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவர், மத்தியபிரதேசத்தின் உமரியா மாவட்டத்தின் லோர்கா கிராமத்தைச் சேர்ந்தவர். அவரது ஓவிய பாணியில் முக்கியமாக இயற்கையும் விலங்குகளும் அடங்கும். இது, பழங்குடி சமூகத்தின் பிற உறுப்பினர்களை வெவ்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவிக்கும் என அவரது ஆசிரியர் ஆஷிஷ் சுவாமி கூறியுள்ளார்.

**5.**இந்திய இராணுவம் தனது 'ஹிம் விஜய்' என்னும் மலைப்பாங்கான போர்ப்பயிற்சியை எந்த மாநிலத்தில் தொடங்கியுள்ளது?

A) ஜம்மு மற்றும் காஷ்மீர்

B) சிக்கிம்

C) ஹிமாச்சல பிரதேசம்

**D) அருணாச்சல பிரதேசம் ☑**



✓ அக்.7 அன்று இந்திய இராணுவம் தனது முதல் மலைப் பகுதி போர்ப் பயிற்சியைத் தொடங்கவுள்ளது. கடினமான நிலப்பரப்பில் படைப்பிரிவுகளின் இயக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் தகவல்தொடர்புகளை சோதிப்பதே இப்பயிற்சியின் நோக்கமாகும். இந்தப்பயிற்சி இரண்டு கட்டங்களாக நடத்தப்படவுள்ளது. முதல் கட்டம், அக்.7–10 வரை நடைபெறும். இரண்டாம் கட்டம், அக்.20–24 வரை நடைபெறும்.

✓ இந்தப் பயிற்சியில், ஒவ்வொன்றிலும் 4,000 வீரர்கள் கொண்ட மூன்று போர் குழுக்கள் பங்கேற்கும். இது இந்திய பாதுகாப்பு வரலாற்றில் மிகப்பெரிய இராணுவப் பயிற்சியாகும். இந்தப் பயிற்சியில், மலைப் பகுதியில் தாக்குதல் நடத்துதல் மற்றும் வான்வெளித் தாக்குதல் ஆகியவை அடங்கும். மெய்யான எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டிலிருந்து இந்திய பிராந்தியத்துக்குள் சுமார் 100 கி.மீ வரை இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

**6.**பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனாவின் (PMJAY) அண்மைய தரவுகளின்படி, எந்த மாநிலத்தின் பெரும்பாலான புற்றுநோயாளிகள் இந்தத் திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்றனர்?

**A) தமிழ்நாடு ☑**

B) சத்தீஸ்கர்

C) மத்திய பிரதேசம்

D) குஜராத்

- ✓ மத்திய சுகாதார அமைச்சகமானது பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய திட்டத்தின் புற்றுநோய் பயனாளிகள் குறித்த விவரங்களை வெளியிட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டில் 40,056 பேரும், கேரளாவில் 22,000 பேரும் மத்திய பிரதேசத்தில் 19455 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதற்கு அடுத்தபடியாக சத்தீஸ்கரில் 15997 பேரும், குஜராத்தில் 14380 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
- ✓ இந்தத் தரவுகளின்படி, நாடெங்கும் ஒவ்வோர் ஆண்டும் புற்றுநோயால் 7.84 இலட்சம் பேர் மரணம் அடைகின்றனர். ஆண்டுக்கு சுமார் 11.57 இலட்சம் புதிய புற்றுநோயாளிகள் உருவாகின்றனர். சுமார் 22.5 இலட்சம் இந்தியர்கள் புற்றுநோயுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

**7.**ஆசியாவிலிருந்து 400 மீ., தங்கம் வென்ற முதல் தடகள வீராங்கனையான சல்வா ஈத் நாசர், எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

A) லெபனான்

**B) பஹ்ரைன் ☑**

C) மங்கோலியா

D) ஓமன்




- ✓ தோஹாவில் தற்போது நடைபெற்றுவரும் IAAF உலக தடகள சாம்பியன்ஷிப்பில், ஆசியாவிலிருந்து 400 மீட்டர் தங்கம் வென்ற முதல் தடகள வீராங்கனை என்ற பெருமையை பஹ்ரைனைச் சேர்ந்த சல்வா ஈத் நாசர் பெற்றுள்ளார். 48.14 வினாடிகளில் அவர் போட்டியை நிறைவுசெய்தார். அது, 34 ஆண்டுகளில் மிக வேகமானதும் வரலாற்றில், போட்டியை நிறைவுசெய்ய எடுத்துக்கொண்ட மூன்றாவது அதிவேகமான வினாடிகளும் ஆகும்.

**8.** 100 T20 சர்வதேச போட்டிகளில் விளையாடிய முதல் இந்திய கிரிக்கெட் வீரர் யார்?

A) ரோகித் சர்மா

B) ஸ்மிருதி மந்தனா

C) விராட் கோலி

**D) ஹர்மன்பிரீத் கவுர் ☑**



- ✓ தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக களமிறங்கிய போட்டியில் தன்னுடைய நூறாவது T20 சர்வதேச போட்டியை விளையாடிய முதல் இந்திய கிரிக்கெட்டாளர் ஆனார் ஹர்மன்பிரீத் கவுர். இந்தியாவுக்காக 98 T20 போட்டிகளில் விளையாடிய M S தோனி மற்றும் ரோகித் சர்மா ஆகியோருக்கு முன்பாக ஹர்மன்பிரீத் கவுர் இந்த மைல்கல்லை எட்டியுள்ளார்.
- ✓ இதுதவிர, ஆஸ்திரேலியாவில் சிட்னி தண்டருடன் பிக் பாஷ் லீக் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முதல் இந்திய கிரிக்கெட்டாளராகவும் (ஆண் அல்லது பெண்) இவர் உள்ளார். ஜூன் 2017இல், ECBஇன் கியா சூப்பர் லீக்கில் சர்ரே ஸ்டார்ஸுடன் கையெழுத்திட்ட முதல் இந்தியராகவும் இவர் உள்ளார்.

9.ஒரு தொடக்க ஆட்டக்காரராக தனது முதல் டெஸ்டில் இரட்டை சதங்களை அடித்த முதல் பேட்ஸ்மேன் யார்?

A) விராட் கோலி

B) ஷிகர் தவான்

**C) ரோகித் சர்மா ☑**

D) K L இராகுல்




- ✓ தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக விசாகப்பட்டினத்தில் நடந்த போட்டியில், தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய இந்தியாவைச் சேர்ந்த ரோகித் சர்மா தனது முதல் டெஸ்டின் ஒவ்வோர் இன்னிங்சிலும் சதமடித்த முதல் பேட்ஸ்மேன் ஆனார். 1996ஆம் ஆண்டில் ஜிம்பாப்வேவுக்கு எதிரான ஆட்டத்தில் 12 சிக்ஸர்களை அடித்த பாகிஸ்தானின் வசீம் அக்ரமை மிஞ்சி, ஒரு டெஸ்டில் அதிக சிக்ஸர்கள் அடித்தவர் (13) என்ற சாதனையையும் அவர் படைத்தார். இதுதவிர, ரோகித், ஒரு டெஸ்டின் இரு இன்னிங்சிலும் ஸ்டம்பிங் செய்த முதல் இந்திய பேட்ஸ்மேன் என்ற பெருமையையும் பெற்றார்.

10. T20Iஇல் ஹாட்ரிக் எடுத்த இளம் கிரிக்கெட் வீரரான முகமது ஹஸ்னைன், எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

A) தென்னாப்பிரிக்கா

B) ஆப்கானிஸ்தான்

**C) பாகிஸ்தான் ☑**

D) வங்கதேசம்




- ✓ பாகிஸ்தானிய வேகப்பந்து வீச்சாளரான முகமது ஹஸ்னைன், T20 போட்டியில் ஹாட்ரிக் எடுத்த மிக இளம் வயது வீரராக உள்ளார். இலாகூரில் நடந்த முதல் T20 சர்வதேச போட்டியில் இலங்கைக்கு எதிராக அவர் இந்தச் சாதனையை புரிந்தார்.

# நடப்பு நிகழ்வுகள்


**1.**எந்தத் துறையில் கண்டுபிடிப்பு மேற்கொண்டதற்காக இயற்பியலுக்கான நடப்பாண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது?

**A)** அண்டவியல் ☑

B) லேசர்

C) ஈர்ப்பு அலைகள்

D) நியூட்ரினோ ஊசலாட்டங்கள்




✓ பேரண்டத்தைப்பற்றி முற்றிலும் வியக்கத்தக்க கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியதற்காக மூன்று அறிவியலாளர்களுக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. ஜேம்ஸ் பீட்பிள்ஸ், டிடியர் குவிலாஸ், மைக்கல் மேயர் ஆகிய மூவருக்கும் இந்த விருது கூட்டாக வழங்கப்பட்டுள்ளது. 50 ஒளியாண்டு தொலைவில் உள்ள சூரியனைப் போன்ற ஒரு விண்மீனைச் சுற்றிவரும் '51 பெகாசி' என்ற வாயுக்கோள் ஒன்றினைக் கண்டுபிடித்ததற்காக டிடியர் குவிலாஸ், மைக்கல் மேயர் ஆகிய இருவரும் நோபல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

✓ அவர்கள் மூவரும் 9 மில்லியன் குரோனர் ரொக்கப்பரிசு, தங்கப்பதக்கம் மற்றும் பாராட்டுப் பட்டயம் ஆகியவற்றை பகிர்ந்துகொள்வார்கள். டிசம்பர்.10 அன்று ஸ்டாக்ஹோமில் நடைபெறவுள்ள விருது வழங்கும் விழாவில், பரிசாளர்கள் அனைவரும் பரிசினைப் பெற்றுக்கொள்வார்கள்.

**2.** 63ஆவது தம்ம சக்ரா பிரவர்த்தன் நாளானது சமீபத்தில் எந்தக் குறிப்பிடத்தக்க ஆளுமைக்காக அனுசரிக்கப்பட்டது?

A) மகாத்மா காந்தி

**B)** B R அம்பேத்கர் ☑

C) லால் பகதூர் சாஸ்திரி

D) சர்தார் வல்லபாய் படேல்



✓ 63ஆவது தம்ம சக்ரா நாளானது அக்.9 அன்று மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் உள்ள தீக்ஷாபூமியில் கொண்டாடப்பட்டது .நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அயல்நாட்டிலிருந்தும் பௌத்த மதத்தை பின்பற்றுபவர்கள் ,இந்திய அரசியலமைப்பின் சிற்பி டாக்டர். பாபாசாகேப் அம்பேத்கருக்கு மரியாதை செலுத்துவதற்காக அவ்விடத்திற்கு வருகைதந்தனர் .டாக்டர் .அம்பேத்கரின் பௌத்த மதமாற்றத்தை கொண்டாடுவதற்காக இந்த நாள் கடைபிடிக்கப்படுகிறது.

**3.**எந்த நகரத்தில், இந்தியாவின் முதல் மின்னனு–கழிவு மருத்துவமனை அமையவுள்ளது?

**A)** போபால் ☑

B) புது தில்லி

C) ஜெய்ப்பூர்

D) நாக்பூர்



- ✓ இந்தியாவின் முதல் மின்னனு–கழிவு மருத்துவமனையானது (e–waste clinic) மத்தியபிரதேசத்தின் போபாலில் அமையவுள்ளது. இந்த உன்னத காரணத்திற்காக, போபால் மாநகராட்சி மற்றும் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. அது, வீடு மற்றும் வணிக பிரிவுகளிலிருந்து கழிவுகளை பிரிப்பது, பதப்படுத்துவது மற்றும் அகற்றுவது ஆகியவற்றில் உதவும்.

- ✓ தொடக்கத்தில், இது மூன்று மாத காலம் நீளும் முன்னோடித் திட்டமாக இருக்கும். அதன் வெற்றியைப் பொறுத்து, இது, நாட்டின் பிற இடங்களிலும் செயல்படுத்தப்படும். 2016ஆம் ஆண்டின் திடக்கழிவு மேலாண்மை விதிகளுக்கு இணங்க இந்த மருத்துவமனை உருவாக்கப்படும்.

4. நடப்பாண்டின் உலக அறிவியல், மதம் மற்றும் தத்துவ நாடாளுமன்றம் நடைபெற்ற நகரம் எது?

A) ஜபல்பூர்

B) புது தில்லி

**C) புனே ☑**

D) கொல்கத்தா




- ✓ ஐந்தாவது உலக அறிவியல், மத மற்றும் தத்துவ நாடாளுமன்றமானது அக்டோபர் 2 அன்று புனேவில் உள்ள MIT அமைதி உலக அமைதிப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டது. ஐந்து நாள் நடைபெற்ற இந்நிகழ்விற்கான கருப்பொருள், "உலக அமைதி & மனித குலத்தின் நலவாழ்வில் அறிவியல், மதம் மற்றும் தத்துவத்தின் பங்கு" ஆகும். உலக அமைதிக்காக மத நம்பிக்கை & மதங்களுக்கிடையிலான இயக்கத்தை உருவாக்கி ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

5. NITI ஆயோக் ஆனது எந்தச் சர்வதேச அமைப்புடன் இணைந்து யூத்கோ: ஆய்வகத்தை (Youth Co: Lab) அறிமுகப்படுத்தியுள்ளது?

**A) UNDP ☑**

B) WHO

C) UNESCO

D) WTO

- ✓ அடல் புதுமை திட்டம் (AIM), NITI ஆயோக் மற்றும் ஐ.நா வளர்ச்சித் திட்டம் (UNDP) இந்தியா ஆகியவை இணைந்து யூத்கோ: ஆய்வகத்தை அறிமுகப்படுத்தியுள்ளன. இது, இந்தியாவில், இளையோர்கள் தலைமையிலான சமூக தொழிற்முனைவையும் புத்தாக்கத்தையும் விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ✓ யூத்கோ: ஆய்வகத்தின் மூலம் இளந்தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்குநர்கள், தொழில்முனைவுத் திறன்களைச் சித்தப்படுத்த உதவும் அரசுகள், வழிகாட்டிகள், அடைவகங்கள் & முதலீட்டாளர்களுடன் இணைவதற்கான வாய்ப்பைப்பெறுவார்கள். இது, பிராந்தியத்தின் மிகப்பெரிய சமூக சவால்களுள் சிலவற்றைக் கையாளவும், முன்மொழியப்பட்ட யோசனைகளையும் தீர்வுகளையும் வெளிப்படுத்தவும் 18–29 வயதுடைய இளையோர்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

**6.** '150 Years of Celebrating the Mahatma the South African Legacy' என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) துளசி ஜெயின்

B) சித்தார்த் கபூர்

C) பிரபாஸ் ஜெயவர்தன்

**D) பாகிர் ஹாசன் (Fakir Hassen) ☑**

✓ '150 Years of Celebrating the Mahatma the South African Legacy' என்னும் நூலை எழுத்தாளரும் இதழாளருமான பாகிர் ஹாசன் எழுதியுள்ளார். 160 பக்கங்கள் கொண்ட இந்த நூலானது காந்தியின் செயல்பாடுகளின் (பிறப்பு மற்றும் இறப்பு நிகழ்வுகள் உட்பட) நினைவுகள் குறித்து வெளிப்படுத்துகிறது.

**7.** UNESCO நல்லெண்ண தூதராக தேர்வு செய்யப்பட்டுள்ள யலிட்சா அபாரிசியோ (Yalitza Aparicio), எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

A) கனடா

**B) மெக்சிகோ ☑**

C) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

D) அர்ஜென்டினா



✓ மெக்ஸிக நடிகை யலிட்சா அபாரிசியோ, பழங்குடி மக்களுக்கான UNESCO நல்லெண்ண தூதராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். 2019ஆம் ஆண்டு அகாடமி விருதுகளில் "ரோமா" திரைப்படத்தில் நடித்ததற்காக, 'சிறந்த நடிகை' விருதுக்குப்பரிந்துரைக்கப்பட்ட முதல் பழங்குடி (Indigenous) நடிகையாக அவர் வரலாறு படைத்தார். அந்தத் திரைப்படத்தில், அவர் ஓர் உள்நாட்டு மொழியிலும் ஸ்பானிய மொழியிலும் பேசி நடித்தார்.

**8.** இந்தோ – மங்கோலிய கூட்டுப்பயிற்சியான, "நாடோடி யானை (Nomadic Elephant) – 2019" ஆனது எந்த மாநிலத்தில் தொடங்கியுள்ளது?

**A) ஹிமாச்சலப் பிரதேசம் ☑**

B) ஜார்கண்ட்

C) அருணாச்சல பிரதேசம்

D) சிக்கிம்



✓ "நாடோடி யானை – 2019" என்னும் இந்தோ–மங்கோலிய கூட்டு இராணுவப் பயிற்சியின் 14ஆவது பதிப்பு, ஹிமாச்சலப் பிரதேசத்தின் பக்லோவில் அக்.5–18 வரை நடைபெறுகிறது. 2006ஆம் ஆண்டு முதல் மங்கோலியாவுடன் ஆண்டுதோறும் இருநாட்டு இராணுவங்களுக்கும் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்த இத்தகைய பயிற்சிகள் நடைபெறுகின்றன.

✓ ஐ.நா ஆணையின் கீழ் நடைபெறும் இந்தப் பயிற்சிகள், கிராமப்புற மற்றும் நகர்ப்புற சூழ்நிலையில் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கான உத்திசார் மற்றும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதற்கு உதவுகின்றன.

9. UNEPஇன் ஆசிய சுற்றுச்சூழல் அமலாக்க விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

A) விவேக் குந்த்ரா

B) S H கான்

C) சுபோத் குமார்

**D) இரமேஷ் பாண்டே ☑**



✓ ஐ.நா சுற்றுச்சூழல் திட்டத்தின்கீழ் (United Nations Environment Programme) வழங்கப்படும் உயரிய விருதான ஆசிய சுற்றுச்சூழல் அமலாக்க விருதுக்கு இந்திய வன சேவை அதிகாரி (IFS) இரமேஷ் பாண்டே தேர்வாகியுள்ளார். கடந்த 1996இல் IFS அதிகாரியாக பொறுப்பேற்ற இரமேஷ் பாண்டே, உ.பிஇல் தலைமை வனத்துறை அதிகாரியாக பணியாற்றி வருகிறார். இவர் வேட்டையர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பேர்பெற்றவர்.

✓ நாடுதாண்டிய சுற்றுச்சூழல் குற்றங்களைத் தடுக்கும் ஆசியாவைச் சேர்ந்த தனிநபர்கள் அல்லது நிறுவனங்களை கௌரவிப்பதற்காக ஆசிய சுற்றுச்சூழல் அமலாக்க விருது வழங்கப்படுகிறது. வரும் நவ.13 அன்று பாங்காக்கில் உள்ள ஐ.நா மாநாட்டு மையத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் இரமேஷ் பாண்டேவுக்கு இவ்விருது வழங்கப்படும்.

10. எந்தத் தேதியில், உலக அஞ்சல் தினம் (World Post Day) கடைப்பிடிக்கப்படுகிறது?

**A) அக்டோபர் 9 ☑**

B) அக்டோபர் 8

C) அக்டோபர் 10

D) அக்டோபர் 7




✓ பொதுமக்கள் மற்றும் வணிகங்களின் அன்றாட வாழ்வில் அஞ்சல் துறையின் பங்கு மற்றும் நாடுகளின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.9 அன்று உலக அஞ்சல் நாள் கொண்டாடப்படுகிறது. 1874ஆம் ஆண்டில், சுவிஸ் தலைநகர் பெர்னில், அனைத்துலக அஞ்சல் ஒன்றியம் நிறுவப்பட்டதையும் இந்நாள் குறிக்கிறது.

---

## நடப்பு நிகழ்வுகள்

1.எந்த நிறுவனத்தின் பரஸ்பர நிதியமானது நிப்பான் இந்தியா பரஸ்பர நிதியம் (Nippon India Mutual Fund) என மறுபெயரிடப்பட்டுள்ளது?

A) ஆதித்யா பிர்லா

B) விப்ரோ

C) டாடா

**D) ரிலையன்ஸ் ☑**

✓ ரிலையன்ஸ் பரஸ்பர நிதியமானது நிப்பான் இந்தியா பரஸ்பர நிதியம் என மறுபெயரிடப்பட்டுள்ளது. ஜப்பானின் நிப்பான் ஆயுள் காப்பீட்டு நிறுவனமானது ரிலையன்ஸ் மூலதனத்திலிருந்து ரிலையன்ஸ் நிப்பான் லைப் சொத்து மேலாண்மையில் 75 சதவீத பங்குகளை கையகப்படுத்திய பின்னர் இந்தப் பெயர்மாற்றம் நிகழ்ந்தது. நிப்பான் லைப் என்பது ஜப்பானின் மிகப்பெரிய ஆயுள் காப்பீட்டு நிறுவனமும் உலகளாவிய நிதிச்சேவை நிறுவனமுமாகும். இது $700 பில்லியன் டாலருக்கும் அதிகமான சொத்துக்களை நிர்வகித்து வருகிறது.

2.சர்வதேச கிரிக்கெட்டில் 20 ஆண்டுகளை நிறைவுசெய்த முதல் கிரிக்கெட் வீராங்கனை யார்?

**A) மிதாலி ராஜ் ☑**

B) ஜூலன் கோஸ்வாமி

C) வேதா கிருஷ்ணமூர்த்தி

D) லிசா தாலேகர்



✓ சர்வதேச கிரிக்கெட்டில் 20 ஆண்டுகளைக் கடந்த முதல் கிரிக்கெட் வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார் இந்திய அணியின் ஒருநாள் அணியின் கேப்டன் மிதாலி ராஜ். கடந்த 1999 ஜூன் 26 அன்று அயர்லாந்து அணிக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் அறிமுகமானார் மிதாலி ராஜ். கிரிக்கெட்டில் 20 ஆண்டுகள் 105 நாள்களை நிறைவு செய்துள்ளார்.

✓ வதோதராவில் அக்.10 அன்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா சார்பாக களமிறங்கிய போது அவர் தனது ஒருநாள் போட்டி வரலாற்றில் 20 ஆண்டுகள் 150 நாட்களை நிறைவு செய்தார். முன்னதாக பெண்கள் ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக போட்டிகள் (204) விளையாடியவர் என்ற சாதனையும் இவர் வசந்தான் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

3.நடப்பாண்டில் வரும் உலக மனநல நாளுக்கான கருப்பொருள் என்ன?

A) Living with Schizophrenia

B) Mental health and older adults

**C) Mental Health Promotion and Suicide Prevention ☑**

D) Dignity in Mental Health

- ✓ மனநலப் பிரச்சனைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.10 அன்று உலக மனநல நாள் அனுசரிக்கப்படுகிறது. "மனநல மேம்பாடு & தற்கொலை தடுப்பு – Mental Health Promotion & Suicide Prevention" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.


**4.** எந்தத் துறையில் கண்டுபிடிப்பு மேற்கொண்டதற்காக வேதியியலுக்கான நடப்பாண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது?

A) நொதிகளின் நேரடி பரிணாமம்

B) கிரையோ – எலக்ட்ரான் நுண்ணோக்கி

**C) லித்தியம் அயன் மின்கலங்கள் ☑**

D) பெப்டைடுகள் மற்றும் ஆன்டிபாடிகளின் பேஜ் காட்சி




- ✓ நடப்பாண்டின் வேதியியல் துறைக்கான நோபல் பரிசு, மேம்படுத்தப்பட்ட லித்தியம் அயன் (lithium–ion) மின்கலத்தைக் கண்டுபிடித்ததற்காக ஜான் பி குட்எனாப், ஸ்டான்லி விட்டிங்காம் மற்றும் அகிரோ யோஷினோ ஆகிய மூன்று அறிவியலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அலைபேசிகள் முதல் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள் வரை அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் லித்தியம் அயன் மின்கலத்தின் மேம்பாட்டுக்கு பங்களித்தமைக்காக அவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

**5.** எந்தத் துறையில் கண்டுபிடிப்பு மேற்கொண்டதற்காக உடலியல் அல்லது மருத்துவத்துக்கான நடப்பாண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது?

**A) செல்லுலார் சுவாசம் ☑**

B) புற்றுநோய் சிகிச்சை

C) சர்க்கேடியன் இசைவு

D) தன்னியக்கவியல்



- ✓ உடலியல் துறையில் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியதன் மூலம் மருத்துவத்துறைக்கு அரிய பங்களிப்பை வழங்கியதற்காக, வில்லியம் ஜி கேலின், கிரெக் எல் செமென்சா ஆகிய இரு அமெரிக்க அறிவியலாளர்களும், பிரிட்டனைச் சேர்ந்த பீட்டர் ஜே ராட்கிளிஃபும் மருத்துவத்துறைக்கான நோபல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- ✓ உயிர்வளி (oxygen) அளவுகளை உயிரணுக்கள் எவ்வாறு உணர்கின்றன, அந்த அளவு மாற்றங்கள் உயிரணுக்களில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பது குறித்து இவர்கள் மேற்கொண்ட ஆய்வு, இரத்தசோகை, புற்றுநோய் உள்ளிட்ட நோய்களுக்கான மருந்துகளை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

**6.** நடப்பாண்டு WEF உலகளாவிய போட்டித்திறன் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?

A) 54 ஆவது

B) 66 ஆவது

**C) 68 ஆவது ☑**

D) 75 ஆவது

**68**

✓ பல்வேறு நாடுகளின் பொருளாதாரங்கள் கண்ட முன்னேற்றங்களால், 2019 WEF உலகளாவிய போட்டித்திறன் குறியீட்டில் இந்தியா 10 இடங்கள் பின்தங்கி 68ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தக் குறியீட்டை ஜெனீவாவை தளமாகக்கொண்ட உலக பொருளாதார மன்றம் (World Economic Forum) தொகுத்துள்ளது. ஒட்டுமொத்த போட்டித்திறன் தரவரிசையில், சிங்கப்பூர் அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி முதலிடத்தைப் பிடித்தது.

**7.** விருது வென்ற "Spirit of Kerala" என்னும் குறும்படத்தின் இயக்குநர் யார்?




A) ரெய்கா ஜெஹ்தாப்சி

B) சுஜோய் கோஷ்

**C) அருண் ஜோசப் ☑**

D) மைத்ரி பாஜ்பாய்

✓ அருண் ஜோசப் இயக்கிய "Spirit of Kerala" என்னும் குறும்படம், சமீபத்தில் முடிவடைந்த 'மை ரோட் ரீல்' திரைப்பட போட்டியில் 'மக்களின் தேர்வு – People's Choice' விருதைப் பெற்ற முதல் இந்திய குறும் படமாக மாறியது. வல்லம்கலி (படகுப்பந்தயம்) பற்றிய மலையாள இளைஞர்கள் குழு எழுதிய இந்தக் குறும்படம், பேரிடரை எதிர்கொண்டு உயிர்வாழும் மக்களின் கொண்டாட்டத்தைக் காட்டுகிறது. 'மை ரோட் ரீல்' திரைப்படப் போட்டி, 'உலகின் மிகப்பெரிய குறும்படப் போட்டி' என்று அழைக்கப்படுகிறது.

**8.** நான்கு ஆண்டுகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிர்மலா ஷியோரன், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?



**A) குறுவிரையோட்டம் (Sprint)☑**

B) மல்யுத்தம்

C) குத்துச்சண்டை

D) பளு தூக்குதல்

✓ ஊக்கமருந்து பயன்படுத்திய புகாரின் அடிப்படையில், இந்திய தடகள வீராங்கனை நிர்மலா ஷியோரனுக்கு, தடகள போட்டிகளில் விளையாட 4 ஆண்டு தடை விதிக்கப்பட்டது. 2018 ஜூன் 29 தேதியிட்டு இந்தத் தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது.

✓ விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் ஊக்கமருந்து உட்கொள்வது தொடர்பாக கண்காணித்து வரும் அதலடிக் இன்டகிரிட்டி யூனிட் எனும் அமைப்பு, 2017ஆம் ஆண்டு இந்தியாவில் நடந்த ஆசிய தடகள போட்டியில் நிர்மலா ஊக்கமருந்துகளை உட்கொண்டதாக தனது ஆய்வில் தெரிவித்துள்ளது. நிர்மலா ஷியோரன், ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் 400 மீ ஓட்டப்பந்தயத்திலும் மற்றொரு 4*400 மீ ரிலே பந்தயத்திலும் இரு தங்கப்பதக்கங்களை வென்றிருந்தார். ஊக்கமருந்து சோதனையை அடுத்து அவர் வென்ற இரு பதக்கங்களும் பறிக்கப்பட்டுள்ளன.

9.மூத்த குடிமக்களுக்கான முதல் அரசு நிதியளிக்கும் பகல்நேர கவனிப்புப் பொழுதுபோக்கு மையமானது எந்த நகரத்தில் திறக்கப்பட்டுள்ளது?

A) தில்லி

**B) லே ☑**

C) சிம்லா

D) டேராடூன்



✓ மூத்த குடிமக்களுக்கான முதல் அரசு நிதியுதவி அளிக்கும் மற்றும் அரசால் இயக்கப்படும் பகல்நேர கவனிப்புப் பொழுதுபோக்கு மையத்தை உச்சநீதிமன்ற நீதிபதி S அப்துல் நசீர் லேவில் திறந்து வைத்தார். லடாக் பிராந்தியத்தில் உள்ள முதியோர்களுக்கு பொழுதுபோக்கு, மருத்துவ சேவைகள் மற்றும் சட்ட உதவிகளுக்கான ஒரு மையமாக இது இருக்கும். இந்த வளாகத்தில், கணினிவழி கற்றல் மற்றும் ஒரு நூலகம் அமைக்கப்பட்டிருக்கும். மேலும், உள்ளரங்கு விளையாட்டு & பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் முதியோர்கள் தங்களை புத்துணர்வாக வைத்திருக்க முடியும்.

10.மத்திய சுகாதார அமைச்சகமானது எந்த நிறுவனத்துடன் இணைந்து இ–தந்த் சேவாவை அறிமுகப்படுத்தியுள்ளது?

A) டாடா நினைவு மருத்துவமனை

B) அப்பல்லோ

**C) எய்ம்ஸ் ☑**

D) ஃபோர்டிஸ் ஹெல்த்கேர்




✓ "e–Dantseva" என்னும் இணையவழி பல்மருத்துவ தகவல் சேவை மற்றும் அலைபேசி செயலியை AIIMS உடன் இணைந்து மத்திய சுகாதார அமைச்சகம் தொடங்கியுள்ளது. வாய் சம்பந்தப்பட்ட சுகாதார தகவல் மற்றும் அறிவைப்பெறுவதற்கு தேசிய அளவில் முதலாவது டிஜிட்டல் மேடையாக இது இருக்கும். இணையம் மற்றும் செல்பேசி செயலி வடிவில், ஒரே சொடுக்கில் 100 கோடி மக்களுக்கும் அதிகமானவர்களைச் சென்றுசேரும் இ–தந்த் சேவா ஒரு முக்கியமான மைல் கல்லாகும்.

✓ இதில், தேசிய வாய்வழி சுகாதார திட்டம் (NOHP), அனைத்து பல் வசதிகள் மற்றும் கல்லூரிகளின் விரிவான பட்டியல், தகவல், கல்வி மற்றும் தொடர்பு குறிப்புகள் மற்றும் 'அறிகுறி சரிபார்ப்பு' எனப்படும் ஒரு தனித்துவமான அம்சம் ஆகியவை உள்ளன.

✓ வாய்ச்சுகாதாரத்தை அதிகபட்சம் பராமரிப்பதன் முக்கியத்துவம்குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அது அருகிலுள்ள வாய்ச்சுகாதாரச் சேவை மையத்தை அணுகி, அதுபற்றி தகவல்களை அறியச் செய்வதும், எய்ம்ஸ் மற்றும் பிறருடன் சேர்ந்த சுகாதார அமைச்சகத்தின் இந்த முன்முயற்சியின் நோக்கமாகும். அதிகாரபூர்வமான அறிவியல் ஆதாரங்களிலிருந்து திரட்டப்பட்ட வாய்ச்சுகாதாரத் தகவல், இணையத்திலும் அலைபேசி செயலியிலும் கிடைக்கும்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

## ****ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு****

- ✓ மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் 2019இல் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பை நடத்துகிறது. இந்தக் கணக்கெடுப்பு தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான டிஜிட்டல் முறையில் தகவல்களைத் திரட்டி சரிபார்த்து வெளியிடவுள்ளது.
- ✓ 1977 தொடங்கி 2013 வரை பொருளாதாரக் கணக்கெடுப்பு ஆறு முறை நடந்துள்ள நிலையில், 7ஆவது கணக்கெடுப்பு இந்த ஆண்டு நடைபெறுகிறது. இதில் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை, இவற்றில் நகர்ப்புறத்தில் உள்ளவை, ஊரகப்பகுதிகளில் உள்ளவை, வேலைவாய்ப்பு உருவாக்க நிலைமை போன்ற தகவல்கள் திரட்டப்படும்.
- ✓ இந்தக் கணக்கெடுப்பு, 27.5 கோடி வீடுகளையும், 5.5 கோடி தொழில் நிறுவனங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும். சுமார் மூன்றரை மாதம் நடத்தப்படும் இந்தக் கணக்கெடுப்பில், சுமார் 12 இலட்சம் பேர் ஈடுபடுவார்கள்.

****__________****__________****__________****__________****

- ✓ பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பின்பேரில் சீன அதிபர் சீ சின்பிங், அரசுமுறை அல்லாத பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, அக்டோபர்.11–12 ஆகிய தேதிகளில் சென்னைக்கு அருகேயுள்ள மாமல்லபுரத்திற்கு வருகை தரவுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இருதலைவர்களும் ஏற்கனவே சீனாவின் வூஹான் நகரில் 27–28 ஏப்ரல் 2018இல் முதன்முறையாக அரசுமுறை அல்லாத பேச்சுவார்த்தையை மேற்கொண்டனர்.

---

## நடப்பு நிகழ்வுகள்

1.எந்நகரத்தில், முதலாவது தேசிய ஹிந்தி அறிவியல் எழுத்தாளர்கள் மாநாடு தொடங்கியுள்ளது?

A) ஜபல்பூர்

B) புது தில்லி

C) சிம்லா

**D) இலக்னோ ☑**




✓ உத்தரபிரதேசத்தில், ஆங்கிலத்தின் பிடியிலிருந்து அறிவியல் எழுத்துக்களை மீட்பதையும், ஹிந்தி & பிற வடமொழிகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு அக்டோபர்.11 அன்று இலக்னோவில் முதலாவது தேசிய ஹிந்தி அறிவியல் எழுத்தாளர்கள் மாநாடு தொடங்கப்பட்டது. ஹிந்தி & வடமொழி அறிவியல் எழுத்தாளர்கள் அனைவரையும் ஒரே மேடையில் கொண்டுவருவதையும், அறிவியல் எழுத்துத்துறையில் ஹிந்தியை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக்கொண்ட இந்த மாநாட்டில், நாடு முழுவதுமிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறிவியல் எழுத்தாளர்கள் பங்கேற்றனர்.

2. 2018ஆம் ஆண்டுக்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்ற ஒல்கா டோக்கர்ஸக், எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

**A) போலந்து ☑**

B) ஆஸ்திரியா

C) பிரான்ஸ்

D) பிரிட்டன்



✓ போலந்து நாட்டைச்சேர்ந்த எழுத்தாளர் ஒல்கா டோக்கர்ஸக், 2018ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரது முதல் புதினமான, "The Journey of the People of the Book" 1993ஆம் ஆண்டில் வெளியானது. ஒல்கா டோக்கர்ஸக், 2007ஆம் ஆண்டில் வெளியான தனது "பிளைட்ஸ்" என்னும் புதினத்துக்காக கடந்தாண்டு புக்கர் பரிசு பெற்றவர். சிறந்த மொழி நடைக்காக அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

✓ ஒல்கா டோக்கர்ஸக், இலக்கியத்துக்கான நோபல் பரிசை வெல்லும் பதினைந்தாவது பெண்ணாவார். 1901ஆம் ஆண்டு முதல் இலக்கியத்துக்கு இதுவரை வழங்கப்பட்ட 116 நோபல் பரிசுகளில், 14 மட்டுமே பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

✓ இலக்கியத்துக்கான நோபல் தேர்வுக் குழுவைச் சேர்ந்த ஜான்–கிளாட் அர்னாட் என்பவர் பாலியல் வழக்கில் கடந்த 2018ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். அதனைத்தொடர்ந்து, அந்தப் பரிசுக்கான தேர்வு முறை குறித்து சர்ச்சை எழுந்தது. இதனால் கடந்த ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்படவில்லை. இந்நிலையில், அந்த ஆண்டுக்கும் சேர்த்து தற்போது இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

**3.** "A Sorrow beyond Dreams" என்னும் நூலின் ஆசிரியர் யார்?



A) கசுவோ இஷிகுரோ

**B) பீட்டர் ஹேண்ட்கே ☑**

C) ஓல்கா டோகார்ஸுக்

D) பாப் டிலான்

✓ ஆஸ்திரிய நாட்டு எழுத்தாளர் பீட்டர் ஹேண்ட்கே, 2019ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பீட்டர் ஹேண்ட்கேவைப் பொருத்தவரை, மனித அனுபவங்களை ஆய்வுசெய்து, அதனை அழகியலுடன் வெளிப்படுத்துவதில் அவர் வல்லவராவார். அவரது படைப்புகள் அனைத்திலும் புதியனவற்றை அறிந்துகொள்ளும் வேட்கையும், அந்தப் புதியனவற்றுக்கு உயிரூட்டம் தரும் புத்தாக்க இலக்கியச் செழுமையும் நிறைந்திருக்கும்.

✓ அவரது குறிப்பிடத்தக்க படைப்புகளுள், "Short Letter, Long Farewell" மற்றும் "A Sorrow Beyond Dreams" ஆகியவை அடங்கும். அவர் 9 மில்லியன் சுவீட குரோனர் (£740,000), அத்துடன் பதக்கம் மற்றும் பாராட்டுப்பத்திரம் ஆகியவற்றைப் பெறுவார்.

**4.** எந்த நோக்கத்திற்காக SUMAN திட்டம் தொடங்கப்பட்டுள்ளது?




A) அயனமண்டலத்தை ஆராய

B) எதிர்வரும் பேரிடர்களிலிருந்து மீனவர்களை எச்சரிக்க


**C) தரமான சுகாதார பராமரிப்பு ☑**

D) மாணவர் கற்றல் திட்டம்

✓ மத்திய சுகாதார & குடும்பநல கவுன்சிலின் 13ஆவது மாநாட்டின் போது, மத்திய சுகாதார அமைச்சர் Dr. ஹர்ஷ் வர்தன், அக்.11 அன்று, புது தில்லியில் சுரக்ஷித் மாத்ரித்வா ஆஷ்வாசன் (சுமன்) என்னும் ஒரு திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

✓ தடுக்கக்கூடிய அனைத்து தாய்வழி & புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்புகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்காக, பொது சுகாதார நிலையத்திற்கு வருகை தரும் ஒவ்வொரு பெண் & புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான சேவைகள் மறுக்கப்படுவதை முற்றிலும் தடுப்பதும் கண்ணியமிக்க, மரியாதைக்குரிய மற்றும் தரமான சுகாதார சேவையை எந்தவொரு கட்டணமுமின்றி வழங்குவதை உறுதிசெய்வதும் இதன் நோக்கமாகும். இது தாய் மற்றும் குழந்தை இருவருக்கும் ஒரு நேர்மறையான அனுபவத்தை வழங்கும்.

**5.** அண்மையில் காலமான கத்ரி கோபால்நாத், எந்த இசைக்கருவியை வாசிப்பதில் சிறந்தவர்?



A) யுகுலேலே

B) வயலின்

**C) சாக்ஸபோன் ☑**

D) புல்லாங்குழல்

✓ பிரபல சாக்ஸபோன் வாத்திய கலைஞரும், 'பத்மஸ்ரீ' விருது பெற்றவருமான கத்ரி கோபால்நாத் (69), அக்.11 அன்று கர்நாடகா மாநிலம் மங்களூருவில் காலமானார். அவர் தனது சாக்ஸபோனில் கர்நாடக இராகங்களை வாசிப்பதில் முன்னோடியாக கருதப்பட்டார். அவரது தயாரிப்பு நிறுவனமான ஈஸ்ட்–வெஸ்ட், மேற்கத்திய மற்றும் இந்திய இசையின் இணைவு ஆகும்.

**6.** முதலாவது இந்திய சர்வதேச கூட்டுறவு வர்த்தக கண்காட்சி தொடங்கிய நகரம் எது?

A) சென்னை

**B) புது தில்லி ☑**

C) பெங்களூரு

D) புனே

✓ முதலாவது இந்திய சர்வதேச கூட்டுறவு வர்த்தக கண்காட்சியானது புது தில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் அக்.11 அன்று தொடங்கியது. 3 நாள் நடைபெறும் இந்தக் கண்காட்சி, இந்திய கூட்டுறவு உற்பத்திகளின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய தளமாகும்; இது மேம்பட்ட கிராமப்புற மற்றும் பண்ணை செழிப்புக்கு வழிவகுக்கும். இந்நிகழ்வில் கண்காட்சிகள், B2B / C2C கூட்டங்கள், மாநாடுகள், கலாசார நிகழ்வுகள் போன்றவையும் நடைபெறும். 36 நாடுகளைச் சேர்ந்த அமைப்புகள் இந்தக் கண்காட்சியில் பங்கேற்கின்றன.

**7.** வளியானது விண்வெளியைச் சந்திக்கும் இடத்தை ஆராய, எந்த விண்வெளி நிறுவனம் 'Icon' செயற்கைக்கோளை ஏவியுள்ளது?

A) இஸ்ரோ

**B) நாசா ☑**

C) ஜாக்ஸா

D) ரோஸ்கோஸ்மோஸ்



✓ காற்று விண்வெளியைச் சந்திக்கும் மர்மமான, மாறிக்கொண்டே இருக்கும் தன்மைகொண்ட அயனமண்டலப் பகுதியை ஆராய்வதற்காக நாசா அண்மையில் தனது புதிய Ionospheric Connection Explorer (Icon) செயற்கைக்கோளை புளோரிடாவில் உள்ள கேப் கனாவெரல் வான்படை தளத்தில் இருந்து ஏவியது. குளிர்சாதன பெட்டி அளவிலான Icon செயற்கைக்கோள், அயனமண்டலத்தில் உள்ள வாயுக்களிலிருந்து உருவாகும் காற்றோட்டத்தைப் பற்றி ஆய்வுசெய்யும்.

✓ மேலும் 360 மைல் (580 கி.மீ) உயரத்துக்கு மின்னேற்றம் செய்யப்பட்ட அச்சூழலையும் அளவிடும். இது தவிர, 'கோல்டு' என்னும் 2018ஆம் ஆண்டில் ஏவப்பட்ட நாசாவின் செயற்கைக்கோள், மேல் வளி மண்டலத்தையும் ஆய்வு செய்கிறது.


8.ஆழ்கடல் மீனவர்களுக்காக எந்தச்செயற்கைக்கோள் அடிப்படையிலான ஆலோசனை சேவை தொடங்கப்பட்டுள்ளது?

A) மேஷம்

**B)** மிதுனம் (Gemini) ☑

C) கன்னி

D) கும்பம்



✓ இந்திய தேசிய பெருங்கடல் தகவல் சேவை மையமும் (INCOIS) இந்திய வானூர்தி நிலைய ஆணையமும் (AAI) இணைந்து புதிய செயற்கைக்கோள் அடிப்படையிலான GEMINI அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளன. இது எதிர்வரும் பேரிடர்கள் குறித்து ஆழ்கடல் மீனவர்களை எச்சரிக்கும். "GAGAN Enabled Mariner's Instrument for Navigation and Information" என்பதன் சுருக்கந்தான் 'GEMINI'. மேலும் இது, இஸ்ரோ மற்றும் AAIஇன் GAGAN (GPS–Aided Geo Augmented Navigation) செயற்கைக் கோள் அமைப்பில் செயல்படுகிறது.

✓ GEMINI மூலம், அனைத்து முக்கிய விழிப்பூட்டல்களும் செய்திகளும் GAGAN வழியாக அனுப்பப்படும், மேலும் இதற்கென வடிவமைக்கப்பட்ட சாதனமானது புளூடூத் தகவல்தொடர்பு மூலம் அதைப்பெற்று அலைபேசிக்கு மாற்றும். அது தொடர்புடைய செயலியானது பின்னர் அந்தத் தகவலை டீகோட் செய்து பயனருக்கு தகவலைக்காண்பிக்கும். இதை 9 மொழிகளில் டீகோட் செய்யலாம். சாதனத்திற்கான தொழில்நுட்பம் பெங்களூருவைச் சேர்ந்த 'Acord' நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

9.எந்த, 'பிரதமரின் புதுமைக் கற்றல் திட்டத்தை' மத்திய அமைச்சகம் தொடங்கியுள்ளது?

A) மிதுனம்

B) துலாம்

C) மீனம்

**D)** துருவ் (Dhruv) ☑




✓ அபாரத்திறமை கொண்ட மாணவர்களின் வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தக்கூடிய பிரத்யேக திட்டமான, பிரதமரின் புதுமைக் கற்றல் திட்டம் – துருவ்'ஐ, மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் இரமேஷ் போக்ரியால் 'நிஷாங்', பெங்களூருவில் உள்ள இந்திய விண்வெளி ஆய்வுக் கழகத்தில் அக்.10 அன்று தொடங்கிவைத்தார்.

✓ தலைசிறந்த படிப்பாற்றல் கொண்ட மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்களை ஊக்குவித்து, அவர்களது திறமையை வெளிக்கொணர்வதுடன், மாணவர்களின் திறன் மற்றும் அறிவாற்றலை மேம்படுத்தும் நோக்கிலும் துருவ் என்ற இந்த புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அறிவியல், கணிதம் மற்றும் நிகழ்த்துக் கலைகளைச்சேர்ந்த 60 பிரகாசமான மற்றும் திறமையான மாணவர்கள் இந்தத் திட்டத்திற்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். துருவ நட்சத்திரத்தின் பெயரால் அழைக்கப்படும் இந்தத் திட்டத்தில் உள்ள ஒவ்வொரு மாணவரும் 'துருவ் தாரா' என்று அழைக்கப்படுகிறார்கள்.

10. "கங்கா ஆமந்திரன் அபியான்" என்னும் ஒரு மாதகால நீளும் ஆய்வுக்குரிய திறந்தவெளி நீர்வழிப் பயணத்தைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?

A) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

**B) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

C) வேளாண்மை மற்றும் உழவர்நல அமைச்சகம்

D) நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம்




- ✓ ஆற்றின் பங்குதாரர்களுடன் இணைவதற்காக மத்திய ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் சேகாவத் சமீபத்தில் 'கங்கா ஆமந்திரன்' என்ற தனித்துவமான திட்டத்தைத் தொடங்கிவைத்தார். இது, கங்கை ஆற்றில் மேற்கொள்ளப்படும் ஒரு மாதகால நீளும் ஆய்வுக்குரிய திறந்தவெளி படகுப்பயணமாகும்.
- ✓ சுமார் 25,000 கிலோமீட்டருக்கும் அதிகமான ஆற்றின் முழுப்பகுதியையும் உள்ளடக்கும் இப்பயணம், தேவப்பிரயாகில் தொடங்கி கங்கா சாகரில் நிறைவடையும். தேசிய தூய்மை கங்கை திட்டத்துக்காக ஆறு முழுவதையும் படகில் சென்று கடப்பதற்கான முதல் முயற்சி இதுவாகும். மேலும், ஆறு புனரமைப்பு மற்றும் நீர் பாதுகாப்பு பற்றிய செய்தியை பேரளவில் பரப்ப, ஒரு சாகச விளையாட்டு செயல்பாடு மூலம் மேற்கொள்ளப்பட்ட மிகநீண்ட சமூக பரப்புரையாகும் இது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.** எத்தியோப்பியாவிற்கும் எந்நாட்டிற்கும் இடையிலான இருபதாண்டுகால போரை முடிவுக்குக் கொண்டுவந்ததற்காக, எத்தியோப்பியாவின் பிரதமர் அபி அகமது, நடப்பாண்டில் அமைதிக்கான நோபல் பரிசை வென்றுள்ளார்?

A) தான்சானியா

B) கென்யா

**C) எரித்திரியா ☑**

D) சூடான்



✓ 2019ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்கு எத்தியோப்பிய பிரதமர் அபி அகமது அலி தேர்வு செய்யப்பட்டுள்ளார். அண்டைநாடான எரித்ரியாவுடன் நீடித்துவந்த பகைமையைப் போக்குவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக, இப்பரிசு அவருக்கு வழங்கப்படவுள்ளது. எரித்திரியாவுடனான அவரது அமைதி ஒப்பந்தம், 1998–2000 வரை நீடித்த எல்லை விவகாரத்துக்கு முடிவுகட்டியது. அமைதிக்காக வழங்கப்படவுள்ள நூறாவது நோபல் பரிசை வரும் டிசம்பரில் ஒஸ்லோவில் நடக்கவுள்ள விழாவில் அபி அகமது அலி பெறவுள்ளார்.

**2.** அண்மைச் செய்திகளில் வெளிவந்த பாஞ்சியோ பூஜியா, எந்த வகையான விலங்கினத்துடன் தொடர்புடையது?

**A) மீன் ☑**

B) ஆமை

C) புலி

D) சிங்கம்



✓ கேரள மீன்வள மற்றும் பெருங்கடல் ஆய்வுகள் பல்கலைக்கழகத்தின் (KUFOS) தலைமையிலான ஓர் ஆய்வுக்குழு, கோழிக்கோட்டில் 'பாஞ்சியோ பூஜியா' என்னும் ஒரு தனித்துவமிக்க நிலத்தடியில் வாழும் ஒரு மீனைக் கண்டுபிடித்துள்ளது. உலகின் முதல் வகை விலாங்கு–அயிரையான இதனை நிலத்தடி சூழலில் வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

✓ விலாங்கு–அயிரைகள் பொதுவாக தெற்கு & தென்கிழக்கு ஆசியாவில் வேகமாக ஓடும் நீரோடைகளில் காணப்படுகின்றன. 'பாஞ்சியோ பூஜியா' தோராயமாக 3 செ.மீ நீளமும் இளஞ்சிவப்பு–சிவப்பு நிறமும் கொண்டுள்ளது. மேலும், ஆழமான நிலத்தடி நீர்நிலைகளின் தூய்மையான நீரில் இது வாழ்கிறது.

**3.** நடப்பாண்டில் சரஸ் ஆஜீவிகா மேளாவை ஏற்பாடு செய்துள்ள மத்திய அமைச்சகம் எது?

A) திறன் மேம்பாடு & தொழில்முனைவு அமைச்சகம்

B) வேளாண்மை & உழவர்நல அமைச்சகம்

**C) ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑**



D) ஜவுளி அமைச்சகம்

- ✓ மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் சார்பில் தீனதயாள் நலிவுற்றோர் உதவித்திட்டம் – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முன்முயற்சியில் சரஸ் எனும் வாழ்வாதாரத் திருவிழா இந்தியா கேட் வளாகத்தில் நடைபெறுகிறது.

- ✓ அக்.10 தொடங்கிய அக்.23 வரை நடைபெறவுள்ள இந்த விழாவை, மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் முறைப்படி தொடங்கிவைத்தார். ஊரகப்பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி செய்த பொருட்களை சந்தைப்படுத்துவதும், அவர்களின் திறன்களை வெளிப்படுத்துவதும் ஒட்டுமொத்தமாகக் கொள்முதல் செய்வோருடன் தொடர்புகளை ஏற்படுத்துவதும் இந்த விழாவின் நோக்கமாகும்.

4. "Ex தர்மா கார்டியன்" என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சி?



A) இலங்கை

**B) ஜப்பான் ☑**

C) நேபாளம்

D) மியான்மர்

- ✓ இந்தியாவிற்கும் ஜப்பானிற்கும் இடையிலான "தர்மா கார்டியன்" என்னும் கூட்டு இராணுவப் பயிற்சியின் இரண்டாவது பதிப்பானது அக்.19 முதல் நவ.2 வரை மிசோரத்தில் நடைபெறவுள்ளது. இரு வாரகாலம் நடைபெறும் இந்தப் பயிற்சியின்போது, இருநாட்டுப்படைகளிடையே இருக்கும் தொடர்பு அதிகரிக்கப்படும். இருதரப்பினரும் கூட்டாக பயணித்து, திட்டமிட்டு, நன்கு திட்டமிடப்பட்ட உத்திசார் பயிற்சிகளை மேற்கொள்வார்கள். இருதரப்புசார்ந்த வல்லுநர்களும் நிபுணத்துவம் குறித்த தங்களின் விரிவான அனுபவங்களை பகிர்ந்துகொள்வார்கள்.

5. "How to Avoid a Climate Disaster" என்னும் நூலின் ஆசிரியர் யார்?



A) சத்யா நாதெல்லா

B) சுந்தர் பிச்சை

**C) பில் கேட்ஸ் ☑**

D) மார்க் ஜூக்கர்பெர்க்

- ✓ மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் நிறுவனரான பில் கேட்ஸ், "How to Avoid a Climate Disaster" என்ற தலைப்பிலான ஒரு நூலை எழுதியுள்ளார். இந்நூலில், காலநிலை மாற்றத்தின் மீது பில் கேட்ஸ் ஏன் இவ்வளவு ஆழமாக அக்கறை காட்டுகிறார் என விளக்கியுள்ளார்.

- ✓ மேலும், காலநிலை நெருக்கடியின் மோசமான தாக்கங்களை உலகத்தால் தடுக்க முடியும் என்ற நம்பிக்கையை எது அவருக்கு அளிக்கிறது எனவும் அவர் இதில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல், 2020 ஜூன் 24 அன்று வெளியிடப்படவுள்ளது.

**6.** 2018ஆம் ஆண்டுக்கான, 'தேசிய ஒருங்கிணைப்புக்கான இந்திரா காந்தி விருது' யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?



A) வந்தனா சிவா

**B) சண்டி பிரசாத் பட் ☑**

C) சுனிதா நரேன்

D) சுகதாகுமாரி

✓ தேசியா ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவும், அதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஆற்றிய சேவைக்காக பிரபல சுற்றுச்சூழல் ஆர்வலர் சண்டி பிரசாத் பட்டுக்கு 31ஆவது 'இந்திரா காந்தி தேசிய ஒருமைப்பாடு விருது' வழங்கப்படவுள்ளது. கடந்த 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுக்கான விருதாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. ₹.10 இலட்சம் ரொக்கப்பரிசையும், சான்றிதழையும் உள்ளடக்கிய இந்த விருதை காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி வழங்கவுள்ளார்.

✓ உத்தரகண்ட் மாநிலத்தைச் சேர்ந்த சண்டி பிரசாத் பட், தசோலி கிராம் ஸ்வராஜ்ய சங்கத்தை கடந்த 1964இல் தொடங்கினார். 'சிப்கோ இயக்கம்' தொடங்கியதற்கு இச்சங்கம் முக்கிய காரணமாக இருந்தது.

**7.** நடப்பாண்டின் இந்திய விளையாட்டு கௌரவங்களில் (Indian Sports Honours), 'வாழ்நாள் சாதனையாளர் விருது' யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?



A) கபில் தேவ்

**B) மில்கா சிங் ☑**

C) புல்லேலா கோபிசந்த்

D) கர்ணம் மல்லேஸ்வரி

✓ மும்பையில் நடைபெற்ற இந்திய விளையாட்டு கௌரவங்களின் (ISH) 2ஆவது பதிப்பில் மில்கா சிங் (92) அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. 'பறக்கும் சீக்கியர்' என்று மிகவும் பிரபலமாக அறியப்படும் அவர், 1960 ரோம் ஒலிம்பிக் போட்டிகளில் 400 மீட்டர் இறுதிப்போட்டியில் நான்காவது இடத்தைப் பிடித்ததற்காக நினைவுகூரப்படுகிறார்.

✓ நட்சத்திர கிரிக்கெட் வீராங்கனை ஸ்மிருதி மந்தனா, அணி பிரிவில், 'ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான' விருதைப் பெற்றார். இதுதவிர, இந்திய கிரிக்கெட்டின் ஆண்கள் அணி, 'ஆண்டின் சிறந்த அணிக்கான' கௌரவத்தைப் பெற்றது. RP–SG குழுமத்தின் தலைவர் சஞ்சீவ் கோயங்கா மற்றும் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோலி ஆகியோரின் முன்முயற்சியே ISH.

**8.** எந்த இந்தியருக்கு, காமோரோஸின் மிகவுயர்ந்த குடிமக்கள் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது?



A) இராஜ்நாத் சிங் B) நரேந்திர மோடி

C) இராம்நாத் கோவிந்த் **D) வெங்கையா ☑**

- ✓ இந்திய குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையாவுக்கு கிழக்கு ஆப்பிரிக்க தீவு நாடான காமோரோஸ் நாட்டின் மிகவுயரிய குடிமக்கள் விருதான "கிரீன் கிரசன்ட்" விருதை அந்த நாட்டின் அதிபர் அசாலி அசவ்மானி, அந்நாட்டின் தலைநகரமான மொரோனியில் வைத்து வழங்கினார்.

- ✓ இந்தியாவும், காமோரோசும் பாதுகாப்பு ஒத்துழைப்பு, சுகாதாரம் & மருத்துவம், கலை மற்றும் பண்பாடு, தொலைநிலைக்கல்வி, தொலைநிலை மருத்துவம் உள்ளிட்ட ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. தூதரக மற்றும் அதிகாரப்பூர்வ கடவுச்சீட்டு வைத்திருப்போரின் குறுகியகால வருகைகளுக்கு நுழைவு இசைவிலிருந்து பரஸ்பரம் விலக்கு அளிக்க இரு நாடுகளும் முடிவுசெய்தன. எரிசக்தி மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு துறையில் காமோரோசுக்கு 60 மில்லியன் டாலர் கடனை இந்தியா வழங்கியுள்ளது.

9.எந்த மாநிலத்தின் மணப்பெண்கள், "முக்கிய மந்திரி கன்யா விவாஹ் / நிக்கா யோஜனா"வின் கீழ், திருமணத்திற்கு முன்பு மணமகனின் வீட்டில் கழிப்பறை இருப்பதை நிரூபித்தால், ₹51000 பெற தகுதியுடையுவர்கள் ஆகிறார்கள்?

A) உத்தரப்பிரதேசம்

**B) மத்தியப்பிரதேசம் ☑**

C) பீகார்

D) இராஜஸ்தான்



- ✓ மத்தியப்பிரதேச மாநிலத்தின் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவுகளைச்சேர்ந்த மணப்பெண்கள், "முக்கிய மந்திரி கன்யா விவாஹ் / நிக்கா யோஜனா"வின் கீழ், திருமணத்திற்கு முன்பு மணமகனின் வீட்டில் கழிப்பறை இருப்பதை நிரூபித்தால், ₹51000 பெற தகுதியுடையுவர்கள் ஆகிறார்கள். இதற்காக, மணமகன், தனது வீட்டில் உள்ள கழிப்பறையில் நிற்பது போன்ற 'செல்பி' படம் எடுத்து அனுப்புவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பறைகள் கட்டப்பட்டிருப்பதை உறுதிசெய்வதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

10.பெண்களுக்கு அதிகாரமளிக்கும் விதமாக, 'கன்யாஸ்ரீ பல்கலை' அமைக்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?

A) கர்நாடகா

**B) மேற்கு வங்கம் ☑**

C) ஒடிசா

D) அஸ்ஸாம்



- ✓ மேற்கு வங்க அரசு நதியா மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணா நகரத்தில் கன்யாஸ்ரீ பல்கலைக்கழகமும் மாநிலம் முழுமைக்கும் கன்யாஸ்ரீ கல்லூரிகளையும் அமைக்க முடிவுசெய்துள்ளது. இந்தப் பல்கலை, முழுவதும் பெண்களுக்கானதாக மட்டுமே இருக்கும். முன்னதாக, 2013இல், அம்மாநிலத்தின் முதல்வர் மம்தா பானர்ஜி, பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களுக்கு நிதியுதவி செய்வதன் மூலம் சிறுமிகளின் வாழ்க்கையையும் தகுதியையும் மேம்படுத்த 'கன்யாஸ்ரீ' திட்டத்தை தொடங்கினார்.

- இதனால், பொருளாதார பிரச்சனையின் காரணமாக குடும்பங்கள் தங்கள் பெண் குழந்தையின் திருமணத்தை பதினெட்டு வயதுக்கு முன்பே ஏற்பாடு செய்வது பெருமளவு தடுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு ஐக்கியப் பேரரசின் சர்வதேச மேம்பாட்டுத் துறையும் UNICEFஉம் சர்வதேச அங்கீகாரம் அளித்துள்ளன.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- கோயம்புத்தூரில் அமைந்துள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பி காளிராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு இந்தப் பதவியை வகிப்பார்.

---